[1990 ஏப்ரல் 20

ஆயுள் தண்டனைக் கைதிகள்.

*1396—திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :
திரு. கே. ரமணி :
திரு. எஸ். டேனியல் ராஜ் :

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பத்து ஆண்டுகளுக்கு மேல் சிறையில் இருந்து வரும் ஆயுள் தண்டனைக் கைதிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அவர்களை விடுதலை செய்து மறுவாழ்வு அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 30—11—1989 அன்று நிலவரப்படி தமிழ்நாடு முழுவதும் ஆயுள் தண்டனை பெற்று 10 ஆண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் கைதிகள் எண்ணிக்கை 240.

(ஆ) 10 ஆண்டுகள் தண்டனை கழிந்தவுடன் அவர்களை விடுதலை செய்ய விதி எதுவும் இல்லை. எனவே, இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கொடுத்ததற்குப் பின்னால் முதலமைச்சர் அவர்கள் சில நாட்களுக்கு முன்னால், கிட்டத்தட்ட 870 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்று சொன்னார்கள். அவர்களுக்கெல்லாம் மறுவாழ்வு அளிக்கின்ற திட்டம் ஏதேனும் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறதா? மறுவாழ்வு அளிப்பதற்கு ஏற்பாடு செய்ய நல்லத் திட்டங்கள் அறிவிக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆண்டுகள் தண்டனை கொடுத்து, ஆயுள் தண்டனைக் குற்றவாளியாக விடுதலை செய்யும்போது, மறுவாழ்வு அளிக்கும் பொருட்டு, 'பிரிசனர்ஸ் இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷன்' ஒன்று அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், அப்படி விடுதலை செய்யப்பட்டு வருகிற சிறைவாசிகளுக்குக் கடன் வசதி செய்ய ஏற்பாடாகியிருக்கிறது. ஆனால், பெரும்பாலானோர் அந்தக் கடன் வசதியை ஏற்றுக் கொள்வதில்லை.

NADU POLLUTION CONTROL BOARD LIBRARY MADRAS

1990 ஏப்ரல் 20]

திரு. கே. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜன்ம தண்டனை பெற்றக் கைதிகள் என்று சொல்லும்போது, 20 வருடங்களுக்குத் தண்டனை என்று அதற்குப் பெயர். அதிலே 'மார்க்ஸ்' எல்லாம் கழித்து விட்டால், 14 வருடம். அந்த 14 வருடம் சிறையில் இருப்பது கூட சூழ்நிலையின் காரணமாக நல்ல மனிதர்கள் கூட, இப்படிப்பட்ட நிலைக்கு ஆளாகவேண்டி வருகிறது. ஆகவே, சிறையில் இருக்கிற அவர்களைச் சீர்திருத்துவதற்கு, அவர்களுடைய நடவடிக்கைகளில் மாற்றங்கள் கொண்டுவந்து நல்ல பிரஜைகளாக உண்டாக்குவதே அதனுடைய 'ஆப்ஜெக்ட்'. எனவே நல்லமுறையிலே அப்படிப்பட்ட கைதிகளை—மோசமான ரிப்போர்ட் இருந்தால் அதனுடைய விஷயமே வேறு—அப்படிப்பட்ட நடவடிக்கை உள்ள கைதிகளை, ஜெயில் கைதிகளுடன் கணக்கு வைத்து 10 வருடம் அனுபவித்தவர்களை விடுதலை செய்வதற்கான ஒரு காரியத்தை ஏன் அரசு கவனிக்கக்கூடாது? அப்படி செய்வதே சரியாக இருக்குமாதலால் அதைச் செய்யுமா அரசு என்று நான் கேட்க விரும்புகிறேன்.

9–20 மணி

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லைஃப் கான்விக்டைப் பொறுத்தவரைக்கும் இரண்டு வகை இருக்கிறது. ஒன்று, 1978-க்கு முன்னாலே தண்டனை அடைந்தவர்கள். இரண்டாவது 1978-க்குப் பிறகு தண்டனை அடைந்தவர்கள். 1978-க்கு முன்னாலே தண்டனை அடைந்தவர்களுக்கு 10 அல்லது $10\frac{1}{2}$ ஆண்டுகள் ஆன பிறகு அட்வைசரி போர்டிலே வைக்கப்பட்டு அது அரசின் பரிசீலனைக்கு வந்து முடிவு செய்யப்படுகிறது. 1978 ஆம் ஆண்டுக்குப் பிறகு தண்டனை பெற்றவர்களைப் பொறுத்தவரையில் சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மெண்ட் ஒன்று குறுக்கே இருக்கிறது. ஜஸ்டிஸ் வி. ஆர். கிருஷ்ணய்யர் ஜட்ஜ்மெண்ட் பிரகாரம் ஒரு ஆயுள் தண்டனை கைதி குறைந்த பட்சம் 14 ஆண்டுக் காலம் சிறையில் இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள், செக்ஷன் 433-ஏ பிரிவின்படி. அந்தப் பிரிவிலே கூட ஏதாவது லூப்ஹோல் இருக்கிறதா என்று பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பரை பகை, பழிக்குப்பழி என்று நடைபெறும் கொலைக்கு, திட்டமிட்டு சொத்துக்களை அபகரிக்க நடைபெறும் கொலைகளுக்கு விதிமுறைகள் கடுமையாக இருந்தாலும் கூட, தற்செயலாக நடைபெறக்கூடிய கொலைகளால் பாதிக்கப்படுவது சொந்தக் குடும்பங்களே என்கின்ற அளவிற்கு எதிர்பாராத நிலையிலே நடைபெறுகின்ற கொலைகள் இவை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது சுப்ரீம்

கோர்ட் ஜட்ஜ்மெண்ட் பாதகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட நிலைமைகளைச் சட்டத் திருத்தத்தின் மூலம் போக்கி, கருணை அடிப்படையிலே சிலரைப் பரிசீலனை செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுதான் சொன்னேன், கருணைக்குச் சட்டம் குறுக்கே நிற்கிறது என்று.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயுள் தண்டனைக் கைதிகளாக இருக்கக் கூடிய ஆண்களுக்கு 10 ஆண்டுகளுக்குமேல் சிறையில் இருந்தால் விடுதலை செய்யக் கூடிய நிலைமை இருந்தாலும் அங்கே ஆயுள் தண்டனைக் கைதிகளாக பெண் கைதிகளும் நிறைய பேர் இருக்கிறார்கள். அதை இப்போதுதான் என்னால் பார்க்க முடிந்தது. ஆகையால், அவர்களுடைய நடத்தையைப் பார்த்து, இவர்கள் 5 ஆண்டுகள் இருந்தால் போதும் என்ற ஒரு நிலையை உருவாக்கி, கருணை அடிப்படையிலே, 5 ஆண்டுகள் முடிந்தவுடனே அவர்களை விடுதலை செய்வதற்கான வழிவகையை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற யோசனைக்கு அரசியல் சட்டத்தின் குறுக்கீடு இருக்கும் என்று எனக்குத் தெரிகிறது. On the basis sex, there could not be discrimination என்ற முறையில் அரசியல் சட்டத்தில் அது அடிபடுமோ என்று நான் கருதுகிறேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அம்மையார் அவர்கள் சொன்னதற்குப் பிறகு அதையும் பரிசீலிக்க வேண்டும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, 10 ஆண்டுகளுக்கு மேல் சிறையில் இருந்து வெளிவரும் ஆயுள் கைதிகளுக்கு மறுவாழ்வு அளிக்கின்ற திட்டத்தை அரசு பரிசீலிக்கும் என்று சொன்னதற்கு மகிழ்ச்சி. அதிலே, சிலர் அங்கே போய் படித்து, பட்டம் பெற்றவர்களாக வெளியே வருகிறார்கள். சிலர் அரசாங்க அதிகாரிகளாக இருந்து, சந்தர்ப்பவசத்தால் உள்ளே போகவேண்டியவர்களாக இருக்கிறார்கள். அப்படி அரசாங்க அதிகாரிகளாக இருந்து உள்ளே போய் வெளியே வருகிறவர்களுக்கு பணி மூப்பிலே ஏதாவது சலுகையும், படித்து பட்டம் பெற்று வருகின்றவர்களுக்கு......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சிறைக்குப் போவது ஒரு கூடுதல் தகுதியா?

1990 ஏப்ரல் 20]

திரு. குமரி அனந்தன் : அரசாங்கப் பணிகளிலே முன்னுரிமை கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் சிறைவாசம் அனுபவித்தவுடன் அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுவார்கள். இப்போது இருக்கின்ற நிலைமை என்னவேன்று சொன்னால் சிறைச்சாலைக்குச் சென்று வந்தாலே வேலை கொடுக்க மறுக்கிறார்கள். அரசாங்கத்தின் மூலமாக நாம் அறிவுரை சொல்லியிருக்கிறோம். சிறைச்சாலைக்குச் சென்று வந்ததற்குப் பிறகும் நல்ல நடத்தை உள்ளவர்களாக இருந்தால் அவர்களுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று அரசின் சார்பாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் சி.ஆர்.பி.சி. 433ஏ, உச்சநீதி மன்றம் மனுராம் என்ற வழக்கில் 14 ஆண்டுக் காலம் கட்டாயமாக சிறையில் இருக்க வேண்டுமென்ற தீர்ப்பைப் பற்றிச் சொன்னார்கள். அது இன்றைக்குத் தீர்ப்பாக இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் நம்முடைய இந்திய அரசியல் சட்டம்தான் எல்லா சட்டத்திற்கும் மேன்மையானது, இறையாண்மையைக் கொண்டது. 161 அண்டு 76-ல் அதாவது ஆளுநரும் ஜனாதிபதியும் எந்த நேரத்திலும் கருணை மனுவை ஏற்றுக் கொண்டு அவர்களை விடுதலை செய்யலாம் என்ற நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதை உச்சநீதி மன்றத்தில் எடுத்துக் காட்டி, ஒரு கிளாரிபிகேஷன், 433ஏ ஜட்ஜ்மெண்டை மறுபரிசீலனை செய்து, 161, 76-ஐ ஜனாதிபதியும், கவர்னரும் அமல்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

மண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல கவர்னருடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி அதைக் குறைக்கலாம். 433 ஏ-க்கு கூட ஒரு விளக்கத்தைத் தருகிறார்கள். அதாவது அரசாங்கம் தண்டனையைக் குறைக்கலாம். உதாரணமாக, மரண தண்டனை கொடுத்தால் அதை ஆயுள் தண்டனையாகக் குறைக்கலாம். மீண்டும் அதைக் குறைக்க முடியாது. அப்படி ஆயுள் தண்டனை கொடுத்திருந்தால் அதைக் குறைப்பதற்கு வாய்ப்பு இருப்பதாக ஒரு இண்டர்பிரிடேஷன் இருக்கிறது. எனவே, அந்த இண்டர்பிரிடேஷனை அடிப்படையாக வைத்துக்கொண்டு, இதற்கு சுப்ரீம் கோர்ட்டிலே வழக்கு போடுவதென்றால் நாளாகும். எனவே அது வேண்டாம். நமக்கு, இண்டர்பிரிடேஷனில் இடம் இருக்கிறதா என்று பார்த்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை ஏற்றுக் கொண்டு அது பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

9-25 மணி

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கையில் சிறைக்கைதிகள் வெளியிலே வருகிறபோது, அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கிற வகையில் பணம் கொடுத்து தொழில் வசதிக்கு ஏற்பாடு செய்தாலும், அதை அவர்கள் ஏற்கவில்லை என்று சொன்னார்கள். இது அரசு அதிகாரிகள் மத்தியில் இருக்கிற ஒரு சூழ்நிலையின் எதிரொலியாக அவர்களால் பெற முடியாத ஒரு நிலை இருப்பதால், இதைப் பெறுவதற்கு அவர்கள் வெளியில் வருவதற்கு ஒரு ஆண்டுக்கு முன்னதாகவே அதிகாரிகள் அவர்களை அணுகி என்ன தொழில் செய்ய விரும்புகிறார்கள், அதற்கு என்ன உதவிகள் தேவை என்று கேட்டு அதை அவர்களே ஏற்படுத்திக் கொடுத்தால் தங்கள் வாழ்வை அமைத்துக்கொள்ள ஏதுவாக இருக்குமே, அதைப் பரிசீலிக்கலாமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கலாம். ஆனால் பத்தாண்டு, 12 ஆண்டு காலம் கழித்து வெளியில் வருவதற்குப் பிறகு, அவர்கள் வேலைக்குப் போக எண்ணம் இருப்பதில்லை. மீண்டும் குடும்பத்தோடு போய்ச் சேரலாம் என்று போய்ச் சேர்ந்து விடுகிறார்கள்.

திரு. எம். முத்தையன் : தலைவர் அவர்களே, ஆயுள் கைதியாக இருப்பவர்கள் 14 வருஷம் முடிந்து வெளியில் வருவதற்கு முன்பு, போர்டு வைப்பது, அல்லது வேறு பல காரணங்கள் காட்டி, கேட்பாரற்ற அவர்கள் கண்ணீர் விட்டுக்கொண்டு உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். எங்களுக்காக பேச ஆள் இல்லையே என்று அவர்கள் வருத்தப்படுகிறார்கள். அதனால் நம்முடைய அரசு அப்படிப்பட்ட சமாச்சாரங்களை உடனுக்குடன் கவனித்து 14 வருஷம் முடிந்தவுடன் அவர்களை உடனே ரிலீஸ் செய்வதற்கு நம்முடைய கருணையான அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரொம்பவும் கருணையோடு சொன்னார்கள். ஒரு குறிப்பை நான் சொல்ல விரும்புகிறேன். இந்த அரசு பொறுப்புக்கு வந்த பிறகு, 14—4—1989 தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று 120 ஆயுள் தண்டனைக் கைதிகளையும், 15—9—1989 அண்ணா பிறந்த நாளன்று 279 ஆயுள் தண்டனைக் கைதிகளையும், அண்மையில் அம்பேத்கர், பாவேந்தர் நூற்றாண்டு விழாக்களை முன்னிட்டு 25 பேர் என்று மொத்தம் 424 ஆயுள் கைதிகளை விடுதலை செய்திருக்கிறோம். சிறைச்சாலையே காலியாகிவிடுமோ என்று சந்தேகப்படுகிறோம்.